**எமது இனத்தின் உயிர் இயக்கத்தின் தூண்களாகச் செயற்படும் பெண்களின் உரிமைகளிற்காகத் தொடர்ந்தும் போராடுவோம்.**

மார்ச்சு 8 சர்வதேச பெண்கள் நாளாகும். பெண்ணியம் தனிக்கோட்பாடாக வளர்ச்சி பெற்றுள்ள நிலையில், பெண்கள் தம் உரிமைகளிற்குப் போராடும் நிலையில் வெற்றி கண்டுள்ளார்கள். ஆயினும் உலக நாடுகள் சிலவற்றின் பூகோள நலன்களாலும் சில பிற்போக்குத் தன்மைகளாலும் மனித உரிமைகள் மதிக்கப்படாத தன்மைகளாலும் வன்முறைகளாலும் பெண்கள், சிறுவர்கள் துன்புறுத்தப்படும் செயற்பாடுகள் தொடந்துகொண்டிருக்கின்றன என்பதும் மறுக்கமுடியாத ஒன்றாகும்.

சிறிலங்காவின் பௌத்த பேரினவாத அரசால் ஏவிவிடப்பட்ட அரச பயங்கரவாதம், தமிழ்ப் பெண்களிற்கெதிராகப் பாலியல் வன்புணர்வுகள், சித்திரவதைகள், கொலைகள், கடத்தல்கள், அடக்குமுறைகள் போன்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைப் பலவடிவங்களில் மேற்கொண்டுவருகிறது. இதனால், வாழ்க்கைத் துணைவரை இழந்தும், உறவுகளைத் தேடியலையும் அவலங்களுக்கும், உடலியல் உளவியல் பாதிப்புக்களுக்கும் உள்ளாக்கப்பட்ட பெண்கள் இன்றும் தமிழர் தாயகத்திலும், புலம் பெயர் தேசங்களிலும் வாழும் சாட்சிகளாக உள்ளனர்.

சிறிலங்காப் பௌத்த பேரினவாத அரசு மேற்கொண்ட தமிழின அழிப்பின் செயற்பாடுகளின் அங்கமாகவே பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான திட்டமிட்ட வன்செயல்களும் அடக்குமுறைகளும் தற்போதும் தொடர்ந்துவருகின்றது. இதில் பாதிக்கப்பட்ட 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் தமது வாழ்க்கைத்துணைவரை இழந்தவர்களாகவும் ஆதரவற்றவர்களாகவும், உடலியல் உளவியல் பாதிப்புக்களுக்கு உட்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், கடத்தல்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, கைதுகள், சித்திரவதைகள், பாலியல் வன்கொடுமை போன்றவை திட்டமிட்ட இனவழிப்பின் வடிவங்களே. இதனை உறுதிப்படுத்துவதற்குப் போதிய சாட்சியங்கள் இருந்தும், சர்வதேசம் தமது பிராந்திய பூகோள நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களிற்குரிய பொறுப்புக்கூறலை மேற்கொள்ள தயக்கம்காட்டி வருவதென்பது தமிழினத்திற்கு நீதி மறுக்கப்படுவதற்கு சமமான செயற்பாடாகும். சிறிலங்கா அரசாங்கத்திற்கு உள்ளக விசாரணைப் பொறிமுறையுடன் கூடிய காலநீடிப்புக்களை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்புரிமை நாடுகள் வழங்கி வருவதென்பது, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைக்கவேண்டிய நீதியை விட, நாடுகளின் பிராந்திய நலன்களுக்கே முக்கியத்துவம் வழங்குகிறார்கள் என்பதையே தெளிவாக்கியுள்ளது. இதன் காரணமாகவே, ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானங்களைத் தாண்டி சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறைக்குள் சிறிலங்காவைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றோம்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பலர் அச்சுறுத்தல்கள் மத்தியில் வறுமையில் வாழ்ந்துவருகின்றார்கள். தமிழர் தாயகம் இராணுவமயமாக்கலால் நிறைந்துள்ளது. தனிநபர்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமைக்கும் பெண்கள் பாலியல் வன்கொடுமை மூலம் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கும் சிறிலங்கா இராணுவமே முழுக்காரணமாகவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பொதுமகனுக்கு 1 இராணுவ சிப்பாயாகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பொதுமகனுக்கு 1 இராணுவ

சிப்பாயாகவும், ஒட்டுமொத்த வட மாகாணத்தில் 10 குடிமக்களுக்கு 1 இராணுவ சிப்பாய் என்ற விகிதத்திலும் இராணுவம் நிலைகொண்டுள்ளது. இத்தகைய இராணுவமயமாக்கல் பெண்களையே மிகவும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளியுள்ளது. மனித குலத்துக்கு எதிராக செயற்பட்டு, போர்க் குற்றங்களிலும் ஈடுபட்டு பாலியல் வன்கொடுமைகள் போன்ற குற்றசாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள சிறிலங்கா இராணுவ கட்டுமானத்திலுள்ள 20 டிவிசன்களில் 16 டிவிசன்கள் வடக்கு கிழக்கில் முகாமிட்டுள்ளன. தமிழின அழிப்பில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினர் சுதந்திரமாக வடக்கு கிழக்கில் நடமாடுகின்றனர். இத்தகைய அச்சுறுத்தலான நிலைமையின் கீழ் பெண்கள் வாழ்வதென்பது மிகக் கொடுமையான சூழ்நிலையாகும்.

கடந்த 17 வருடங்களில் குற்றங்கள் செய்த தரப்புக்கள் தொடர்பாக எந்தவிதமான பொறுப்புக்கூறலும் நடைபெற்றிராத நிலையில், அந்த குற்றங்களால் பாதிக்கப்பட்டிருந்தமை மட்டுமல்லாமல், அதே குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகள் சமூக மட்டத்தில் சுதந்திரமாக நடமாடும் போது, அதே சூழலுக்குள்ளேயே பெண்கள் தொடர்ந்தும் வாழ்வதானது பெண்களை உளவியல் ரீதியாக பாதிக்கும் தொடர் வன்முறைக்கு சமனான ஒரு செயற்பாடாகும்.

வடக்கு கிழக்கைப் பொறுத்த வரையில், இராணுவத்தினரின் அறிவுறுத்தலின் பேரில், பொலிசார் மிகவும் அதிகார துஸ்பிரயோகமாக நடந்து கொள்கிறார்கள். வடக்கு கிழக்கில் இராணுவத்துக்கும், பொலிசாருக்கும் இடையில் வேறுபாட்டைக் காணமுடியவில்லை. அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட, மூடிய சிறைச்சாலை போன்ற சூழமைவில், தமது குடும்பத்தையும் பிள்ளைகளையும் பாராமரித்து தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டுவரும் பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் நிலைமை பாரியசவாலும், அச்சுறுத்தலும் நிறைந்ததாகவே உள்ளது.

சமூக மட்டத்தில் காணப்படும் பிற்போக்கு சிந்தனைகளிலும் காலங்காலமாக உள்ள இத்தகைய நிலைப்பாடுகளிலிருந்தும் மாற்றங்களைக் கொண்டுவரவேண்டியுள்ள நிலையில், பெண்களும் சிறுவர்களுமே அச்சுறுத்தலான நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இத்தகையை நிலைமைகளை ஏற்றுக்கொண்டு பிரச்சினைகளை இனங்கண்டு செயற்பட வேண்டியதே காலத்தின் தேவையாகும். அதற்குரிய பரிந்துரைகளின் அடிப்படையில் பெண்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைப் பெறுவதற்கு குரல்கொடுப்பதே மிகப்பெரும் சவாலாகவுள்ளது. எனவே, ஓட்டுமொத்த தமிழினமும் பெண்களுக்கான நீதிகிடைக்கக்கூடிய வழிகளில் போராட முன்வரவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் சர்வதேச நீதியைப் பெறுவதற்கான விட்டுக்கொடுப்பற்ற நிலைப்பாட்டை எடுப்பதே இதற்கான ஒரே ஒரு வழிமுறையுமாகும்.

எனவே, ஒட்டுமொத்த தமிழினமும் சர்வதேச விசாரணையுடாக நீதியைப் பெற்றுகொள்ளவேண்டும் என்ற ஒருமித்த நிலைப்பாடுகளில் ஒன்றிணைவது மட்டுமே தமிழினத்தின் இருப்பைப் பாதுக்காப்பதற்கும், எமது இனத்தின் உயிர் இயக்கத்தின் தூண்களாக செயற்படும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் உள்ள ஒரே வழிமுறையாகும். இதில் அனைத்துலகப் பெண்கள் அமைப்புக்களும் எமக்கான உரிமைக்காகக் குரல்கொடுக்க முன்வரவேண்டும் என இந்நாளில் வேண்டிநிற்கின்றோம்.